# முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 27-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.322/2021

வா.சா.1 **ஜானகி**

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எனக்கு நன்றாக படிக்கத்தெரியுமா என்றால் சுமாராக படிக்கத்தெரியும் ஆனால் எழுதத் தெரியாது. என் கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் டையிங் தொழில் செய்து வந்தார். எங்கல் வீட்டில் எத்தனை பேர் உள்ளோம் என்றால் 4 பேர் உள்ளோம். எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் இரண்டு வங்கியில் கணக்கு உள்ளது. அந்த கணக்கை சுமார் 10 வருடங்களாக பராமரித்து வருகிறேன். என்னுடைய வங்கி வரவு செலவு கணக்கை நான் தான் பார்த்து வருகிறேன். நான் வேறு நபர்களிடம் கடன் பெற்றுக்கொண்டு அது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. நான் யாரிடமும் கடன் வாங்கவில்லை. எனக்கும் எனது கணவருக்கும் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால் என் கணவரின் அப்பா சொத்து அவரிடம் உள்ளது. என் அப்பா சொத்து என்னிடம் உள்ளது. எங்களுக்கு தோட்டம், வீடு உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகிறோம். என்னுடைய வீட்டு வரவு செலவுகளை நான்தான் கவனித்து வருகிறேன். கந்தன் டெக்ஸ் ன் உரிமையாளர் யார் என்றால் இளங்கோ ஆகும். இளங்கோ என்பவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள் அவர் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 1 ம் பிரதிவாதி நிறுவனம் இல்லை என்றும், அந்த நிறுவனத்தை தரப்பினராக சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2009 ம் வருடம் முருகவேல் என்பவரிடம் இருந்து சதுரடி ரூ.1000/-வீதம் வாங்கினோம். 2009 ம் வருடம் கிரையபத்திரத்தின் படி ரொக்கமாக ரூ.4,77,000/- கொடுத்து கிரையம் பெற்றதாக கிரையப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கண் ஆப்ரேஷன் செய்துள்ளதால் ஆவணத்தை பார்க்க இயலவில்லை. நான் வாங்கிய கிரையப் பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் உண்மையானது தானா

என்றால் உண்மையானது தான். அந்த ஆவணத்தில் கண்டுள்ள மதிப்பு விவரங்கள் எல்லாம் சரியானதா என்றால் சரியானது தான். நான் கிரையம் பெற்ற போது சார்பதிவாளர் அலுவலகம் சென்று அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டுதான் கிரையம் வாங்கினேன்.

ஏற்கனவே நான் பத்திரப்பதிவிற்காக சார்பதிவாளர் அலுவலகம் சென்று வந்துள்ளதால் அங்கு என்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பாக பத்திரத்தின் தரப்பினர்களை அழைத்து விசாரித்து சொத்து விவரத்தை சரிபார்ப்பார்கள் என்றால் சரிதான். அதேபோல் சார்பதிவாளர் பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகளை ஒப்புக்கொள்கிறீர்களா என்று இருதரப்பினர்களையும் கேட்டு சம்மதம் தெரிவித்தால் தான் பத்திரத்தை பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். என் பெயரில் கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்ட போது அன்றைய தேதியில் சொத்தின் இணைய மதிப்பு குறிப்பிட்டு தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் விலைக்கு வாங்கிய போது இருந்த சொத்தின் மதிப்பானது தற்போது பலமடங்கு உயர்ந்துவிட்டது என்றால் தெரியாது. கொஞ்சம் ஏறியிருக்கும். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.4 முதல் 7 வரையிலான ஆவணத்தில் என்னுடைய பெயர் இல்லை என்றும் முருகவேல் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012 ம் வருடம் எனக்கு பணத்தேவை இருந்தது என்றால் சரிதான். அதற்காக இறந்துபோன இளங்கோவன் என்பவரிடம் விலை பேசினேன் என்றால் சரியல்ல. ரூ. 1 ½ வட்டிக்கு பணம் வாங்கினேன். வட்டிக்கு பணம் வாங்கினேன் என்ற விவரம் எந்த தேதியில் யார் முன்னணியில் பணம் வாங்கினேன் என்று வழக்கறிவிப்பிலும் பிராதிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் பெயரிலுள்ள அசல் கிரைய ஆவணத்தை நான் தான் இளங்கோவனிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். என்னுடைய சுய விருப்பத்தின்பேரில் தான் பத்திர அலுவலகம் சென்று பத்திரம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானது என்றால் சரிதான். வட்டிக்கு வாங்கிய கடனுக்காகத் தான் அவ்வாறு ஆவணம் எழுதிகொடுத்தேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் படித்துக்காட்டப்பட்டு என்னுடைய முழுசம்மதத்தின் பேரில் தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பு சரியானது என்று ஒப்புக்கொண்டு தான் பதிவு செய்து கொடுத்தேன் என்றால் ரூ.10,00,000/-கடன் வாங்கியிருந்தேன். அந்த கடன் தொகை மதிப்பு குறிப்பிட்டு பத்திரம் பதிவு செய்து கொடுத்தேன்.

கடனுக்காக ஆவணங்கள் எழுதிக்கொடுத்த பலவகையான ஆவணங்கள் உள்ளது என்றால் நான் வாங்கிய கடனை வட்டியுடன் செலுத்திவிட்டால் என் பெயருக்கு ஆவணம் எழுதிக்கொடுப்பதாக சொன்னதால் கிரைய ஆவணமாக எழுதிக்கொடுத்தேன். நான்கு வருடம் வட்டி செலுத்தியுள்ளேன். நான் சொன்னதுபோல் வட்டி செலுத்தியிருந்தால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் எனது கணவர் தான் நான்கு வருடம் வட்டியை ரொக்கமாகவும், காசோலையாகவும் கொடுத்துள்ளார். என் கணவருக்கு டைரி எழுதும் பழக்கம் உள்ளதா என்றால் ஒருசில விவரங்களை எழுதிவைத்துள்ளார். எனக்கு தெரிந்த விவரங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால் பேப்பர் இருந்தால் ஒப்படைக்கலாம். இளங்கோவனுக்கு யார் முன்னிலையில் நான் சொல்லும் வட்டி பணம் கொடுக்கப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இளங்கோவனுடன் நாங்கள் கூட்டாக தொழில் செய்து வந்ததால் தொழில் மூலம் கிடைத்த லாபத்தை வட்டிக்காக கழித்துக்கொள்வார். இளங்கோவன் கொடுக்கும் பீஸை டையிங் செய்து கொடுப்போம். மேற்படி தொழிலுக்கு இளங்கோவன் தான் எங்களுக்கு பணம் தரவேண்டியிருக்கும் என்றால் சரிதான். இளங்கோவனுடன் தொழில் செய்து வந்து கிடைக்கும் லாபத்தை வட்டிக்கு கழித்துக்கொள்வார் என்ற விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இளங்கோவன் பெயருக்கு பத்திரம் பதிவு செய்து கொடுப்பதற்கு நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். 2012 ம் வருடம் பத்திரம் பதிவு செய்து கொடுத்த நாள் முதல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் நாள் வரை காவல்நிலையத்திலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ புகார் மற்றும் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக கிரைய ஆவணம் கடனுக்காக எழுதிக்கொடுக்கப்பட்டது என்று வேறு நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யவில்லை. அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. கலெக்டர் அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் காவல்நிலையம் ஆகியவற்றில் புகார் கொடுத்துள்ளோம். மேற்படி புகாரின் நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு புகார் எதுவும் கொடுக்காததால் தான் அவை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் எழுதி கொடுத்து 9 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் 06.12.2020 தேதியில் பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு மூலமாக சொல்லப்பட்டுள்ள தேதியில் கொரோனா

காலகட்டத்தில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருந்த சமயம் என்றும் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**